ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1518/15 - 2007 ඔක්තෝබර් 09 වැනි අඟහරුවාදා - 2007.10.09

1518/15 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. - பீ 21/78

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர் கல்வி அமைச்சர், பேராசிரியர் வட்டரெக்க ஆராச்சிலாகே விஸ்வா வர்ணபால ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் தொடர்பில் மேற்படி சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1995, நவெம்பர் 7 ஆந் திகதிய 896/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006 யூலை 7 ஆந் திகதிய 1452/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் திருத்தப்பட்டவாறானதுமான கட்டளைக்கான அட்டவணையை அத்தகைய அட்டவணையின் நிரை I லும் அதற்கான நிரை II இல் காணப்படும் அதன் நேரோத்தப் பதிவுகளிலும் "மருத்துவம் மற்றும் சார்புடைய அறிவியல் பீடம்" என்னும் விடயத்தை இக்கட்டளையால் நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் திருத்துகின்றேன்.

| "*நிரை I* | *நிரை II* |
|---|---|
| *பீடம்* | *துறைகள்* |
| மருத்துவம் மற்றும் சார்புடைய அறிவியல் பீடம் | 1. உடற்கூற்றியல் துறை |
| | 2. உடற்றொழிலியல் துறை |
| | 3. உயிர் இரசாயனவியல் துறை |
| | 4. மருந்தாக்கவியல் துறை |
| | 5. நோயியல் துறை |
| | 6. ஒட்டுண்ணியியல் துறை |
| | 7. சமூக நோயியல் துறை |
| | 8. குடும்ப நோயியல் துறை |
| | 9. நுண்ணுயிரியல் துறை |
| | 10. சட்ட மருத்துவத் துறை |

| "*நிரை I* | *நிரை II* |
|---|---|
| *பீடம்* | *துறைகள்* |
| | 11. மருத்துவத் துறை |
| | 12. அறுவைச் சிகிச்சைத்துறை |
| | 13. மகப்பேற்றியல் மற்றும் பெண்நோயியல் துறை |
| | 14. உளநோயியல் துறை |
| | 15. சிறுவர் நோயியல் துறை.". |

(பேராசிரியர்) வட்டரெக்க ஆராச்சிலாகே விஸ்வா வர்ணபால,
உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2007, ஒற்றோபர் 4.

*10-761*